| | |
|---|---|
| அனுப்புநர்<br>திரு.பா.பொன்னையா.,இ.ஆ.ப<br>ஆணையர்,<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,<br>பனகல் மாளிகை, சைதாப்பேட்டை<br>சென்னை.15 | பெறுநர்<br>மாவட்ட ஆட்சித் தலைவர்/<br>பெருந்தலைவர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>அனைத்து மாவட்டங்கள் |

ந.க.எண். **58489/2025/MGNREGS II-1,** நாள். **14.08.2025**

ஐயா/அம்மையீர்,

பொருள்: மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம்- பணி இணையாளர்களை (Work Mate) ஈடுபடுத்துதல்- அறிவுரைகள் அளிக்கப்பட்டது – அறிக்கை மற்றும் சான்று கோருதல் - சார்பு

பார்வை:
1. இவ்வியக்கக கடிதம் எண். 13977/2020/MGNREGS II-1, நாள்.31.10.2023
2. அரசாணை எண். 110.ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி-1) துறை, நாள். 29.06.2024
3. இவ்வியக்கக கடிதம் எண். 13977/2020/MGNREGS II-1, நாள்.16.07.2024.

.......

பார்வையில் காணும் அரசாணை மற்றும் கடிதத்தின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பார்வை 2ல் காணும் அரசாணையில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் பணி இணையாளர் தேர்வு, பணித்தளத்தில் ஈடுபடுத்துதல், அவர்களின் பணிகள் போன்றவை தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டது.

அதில், பணி இணையாளர்கள் பணிபுரிய வேண்டிய கால அளவுகள் தொடர்பான பின்வருமாறு அறிவுரைகள் வெளியிடப்பட்டது. அவை பின்வருமாறு.,

1. நியமனம் செய்யப்படும் பணி இணையாளர், பணி தொடங்கப்பட்டது முதல் முடிவடையும் வரை அல்லது ஒரு நிதியாண்டில் 100 நாட்கள் இவற்றில் எது முந்தியதோ அந்த நாள் வரை பணி இணையாளராக பணிபுரிய தகுதியானவர் ஆவர்.
2. பணியானது 100 நாட்களுக்கு மேல் மேற்கொள்ளப்பட்டால் 100 நாட்களுக்கு பிறகு புதிய பணி இணையாளர் ஈடுபடுத்தப்பட வேண்டும். எந்த நிலையிலும், பணி இணையாளர் நிதியாண்டில் 100 நாட்களுக்கு மேல் பணிபுரிதல் கூடாது
3. குறிப்பிட்ட நாட்களில் பணி இணையாளர் வருகை தரவில்லை எனில், கிராம ஊராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் பணி இணையாளர்களின் தேர்வு பட்டியலில் இருந்து ஒரு பயிற்சி பெற்ற பணி இணையாளர், பணி இணையாளராக செயல்படுவார்
4. புதிய பணி தொடங்கும் போது, மற்றொரு பயிற்சி பெற்ற தொழிலாளர் பணி இணையாளராக நியமனம் செய்யப்பட வேண்டும். பணி நடைபெறும் குக்கிராமத்தில் இருக்கும் தொழிலாளருக்கு பணி நியமனம் வழங்க முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

மேற்படி அறிவுரைகள் பார்வை 1ல் காணும் இவ்வியக்கக கடிதம் மூலம் அனைத்து மாவட்டங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மாதாந்திர மற்றும் வாராந்திர ஆய்வுக்கூட்டங்களிலும் மேற்படி அறிவுரைகள் தொடர்ச்சியாக அறிவுறுத்தப்பட்டுவருகின்றன.

ஆனால், பணி இணையாளர்கள் மாற்றப்படாமல் தொடர்ந்து பணிபுரிந்து வருவதாக புகார்கள் இவ்வியக்ககத்தில் தொடர்ந்து பெறப்பட்டு வருகின்றன.

எனவே, கீழ்க்கண்ட அறிவுரைகள் தவறாது பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

1. பணியானது 100 நாட்களுக்கு மேல் மேற்கொள்ளப்பட்டால் 100 நாட்களுக்கு பிறகு புதிய பணி இணையாளர் ஈடுபடுத்தப்பட வேண்டும். எந்த நிலையிலும், பணி இணையாளர் நிதியாண்டில் 100 நாட்களுக்கு மேல் பணிபுரிதல் கூடாது.
2. ஒரு கிராம ஊராட்சியில் செயல்பட்டு வரும் பணித்தளங்களின் 5 மடங்கு எண்ணிக்கையில் பணி இணையாளர்கள் தேர்வு செய்திட இலக்கு நிர்ணயிக்க வேண்டும் என்றும் அத்தேர்வு பட்டியல் கிராம சபை / சிறப்பு கிராம சபை கூட்டத்தில் வைக்கப்பட்டு, அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட வழிகாட்டுநெறிமுறைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதனை முறையாக பின்பற்ற வேண்டும்.

3. கிராம ஊராட்சியின் பணி இணையாளர்களின் தேர்வு பட்டியலில் உள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

4. காலை மற்றும் மாலை வேளைகளில் மின்னணு வருகை பதிவேடு செயலியினை பயன்படுத்தி புகைப்படம் எடுத்தல் மற்றும் வருகைபதிவேட்டினை மேற்கொள்ளுதல். தினந்தோறும் ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் வேலை அட்டையில் வருகையினை பதிவு செய்தல். வாரந்தோறும் ஊதியம் பெற்ற விவரங்களையும் பதிவு செய்தல் போன்ற பணிகள் செய்வதை கள ஆய்வில் உறுதி செய்ய வேண்டும்.

கூடுதல் ஆட்சியர் (வ)/திட்ட இயக்குநர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவி திட்ட அலுவலர் மற்றும் மண்டல அலுவலர்கள் கள ஆ,ய்வு மேற்கொள்ளும் போது பணி இணையாளர்களின் வேலை நாட்கள் மற்றும் அவரது பணி குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும் மற்றும் ஒரே பணி இணையாளர் 100 நாட்களுக்கு மேல் பணிபுரிவது இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும், அவ்வாறு 100 நாட்களுக்கு மேல் பணிபுரிவது கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், நடவடிக்கை எடுத்த விவரங்களையும் இவ்வியக்ககத்திற்கு அனுப்ப கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், செப்டம்பர் மாத கூடுதல் ஆட்சியர் (வ)/திட்ட இயக்குநர், செயற்பொறியாளர் கூட்டத்தில் அறிக்கைகள் ஆய்வு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-பா.பொன்னையா
ஆணையர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவி இயக்குநர் (MGNREGS)

**நகல்**
கூடுதல் ஆட்சியர் (வ)/ திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
அனைத்து மாவட்டங்கள்